# கொடைக்கானல் நகராட்சி

2020ம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் நாள் (31.07.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி TN 57 AY 9358 க்கு 01.04.2020 முதல் 30.06.2020 வரை சாலை வரி தொகை ரூ.3596/– இந்நகராட்சி பணி ஆய்வர் திருமதி. பவித்ரா அவர்களால் செலுத்தப்பட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளார். (Transaction / Receipt No. TN 200602V0772280/ TN200602C1468039, Dated.2.06.2020) இத்தொகையினை அன்னாருக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 859, நாள். 31.07.2020. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

2) மூலதன மானிய நிதி மற்றும் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி (ம) இயக்குதல் (ம) பராமரிப்பு நிதி 2019–2020 ன் கீழ் கொடைக்கானல் நகராட்சி, வார்டு டி, பிளாக் 3, நகரவு எண். 40, அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் நவீன ஆட்டிறைச்சி கூடம் அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாநில அளவிலான நாளிதழில் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சி, வார்டு டி, பிளாக் 3, நகரவு எண். 40, அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் நவீன ஆட்டிறைச்சி கூடம் அமைத்தல் | Accord Advertising Agencies, Chennai (The New Indian Express & Malai Murasu dated 20.3.2020) State Level | AAA/0973/19-20 dated 24.03.2020 | 72188/– |
| 2 | | Mark media communications, Chennai (The New Indian Express & Namadhu Puratchi Thalaivi Amma dated 24.5.2020) State Level | 1186 dated 26.05.2020 | 88988/– |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனங்களுக்கு பொது நிதியில் இருந்து வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். (கோப்பு .ந.க.எண். 27/2009/இ1)

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 860, நாள். 31.07.2020. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

3) கொடைக்கானல் நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு கொரோனா கட்டுப்பாட்டு பகுதியில் தகரத்தினால் ஆன தடுப்புகள் அமைக்கும் பணிக்கு 22.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொரோனா கட்டுப்பாட்டு பகுதியில் தகரத்தினால் ஆன தடுப்புகள் அமைக்கும் பணி | 5.00 | ஆர். தண்டபாணி<br>எஸ்.கோகிலாராணி | 0.39% குறைவு<br>0.83% அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு ஆர். தண்டபாணி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **861, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள 24 வார்டுகளுக்கும் தலைமை நீர்த்தேக்கம் மற்றும் நகர் பகுதியில் உள்ள திறந்த வெளி கிணறுகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி மூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீரினை சுகாதார முறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீராக வழஙகிடும் பொருட்டு திறந்த வெளி கிணறுகளில் திரவ பிளாண்டேஷன் பிளாண்ட் (உறபோ குளோரைடு முறையில் ) குடிநீர் நிதியின் மூலம் நிறுவுவதற்கு 21.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ஆனந்தகிரி 4–வது தெரு கிணற்றில் உறைபோ குளோரின் பிளாண்ட் அமைத்தல் | 6.90 | M/s. People Chemical Industrites, Andipatty<br>M/s. Shri Shathya Dyes and Chemicals, Aundipatty. | 1.80% குறைவு<br>4.08% அதிகம் |
| 2 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான எம்.எம். தெரு கிணற்றில் உறைபோ குளோரின் பிளாண்ட் அமைத்தல் | 6.95 | M/s. People Chemical Industrites, Andipatty<br>M/s. Shri Shathya Dyes and Chemicals, Aundipatty. | 0.57% குறைவு<br>1.29% அதிகம் |
| 3 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மலர்ந்த ரோஜா கிணறு எண். 1–ல் உறைபோ குளோரின் பிளாண்ட்அமைத்தல் | 6.90 | M/s. People Chemical Industrites, Andipatty<br>M/s. Shri Shathya Dyes and Chemicals, Aundipatty. | 1.80% குறைவு<br>4.08% அதிகம் |
| 4 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மலர்ந்த ரோஜா கிணறு எண். 2–ல் உறைபோ குளோரின் பிளாண்ட்அமைத்தல் | 7.40 | M/s. People Chemical Industrites, Andipatty<br>M/s. Shri Shathya Dyes and Chemicals, Aundipatty. | 0.80% குறைவு<br>1.14% அதிகம் |
| 5 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பில்டிங சொசைட்டி கிணற்றில் உறைபோ குளோரின் பிளாண்ட்அமைத்தல் | 6.65 | M/s. Shri Shathya Dyes and Chemicals, Aundipatty.<br>M/s. People Chemical Industrites, Andipatty | 0.60% குறைவு<br>1.33% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான அப்சர்வேட்டரி செக்டேம் டேங்கில் உறைபோ குளோரின் பிளாண்ட்அமைத்தல் | 7.45 | M/s. Shri Shathya Dyes and Chemicals, Aundipatty.<br><br>M/s. People Chemical Industrites, Andipatty | 0.87% குறைவு<br><br>1.12% அதிகம் |
| 7 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான லாயிட்ஸ் சாலை கிணற்றில் உறைபோ குளோரின் பிளாண்ட் அமைத்தல் | 6.91 | M/s. Shri Shathya Dyes and Chemicals, Aundipatty.<br><br>M/s. People Chemical Industrites, Andipatty | 0.08% குறைவு<br><br>4.08% அதிகம் |
| 8 | கொடைக்கானல் நகராட்சிக்கு தலைமை நீர்த்தேக்க பம்ப் அறையில் உறைபோ குளோரின் பிளாண்ட் அமைத்தல் | 8.72 | M/s. Shri Shathya Dyes and Chemicals, Aundipatty.<br><br>M/s. People Chemical Industrites, Andipatty | 0.71% குறைவு<br><br>1.17% அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **862, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகர் பகுதியில் கடந்த வாரம் பெய்த கனமழையின் காரணமாக இந்திரா நகர் குடியிருப்பு பகுதியில் தாங்கு சுவர் இடிந்துவிட்டது. இதனால் இப்பகுதியில் நடைபாதை துண்டிக்கப்பட்டு பொதுமக்கள் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை சரி செய்வதற்கு பொது நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 4.50 இலட்சம் ( ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **863, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகர் பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, நகர் பகுதிகளில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. தற்போது நகர் பகுதியில் கொரோனா தொற்று ஆங்காங்கே ஏற்பட்டு கட்டுப்பாட்டு பகுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நகர்பகுதியில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டு உயிர் இழந்தவர்களை அடக்கம் செய்வதற்கு தேவையான Dead Body cover - 50எண்ணம் அவசர அவசியம் கருதி வாங்கிட விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பொருளின் விபரம் | நிறுவனத்தின் பெயர் | விலை ரூ / (ஒன்றுக்கு மட்டும்) |
|---|---|---|---|
| 1 | Dead Body Cover | Vive Solution, 13/14, Ambedkar Nagar Scheme Area, 200 Feet road, Kolathur, Chennai. | 500/- |
| 2 | | Ascend India, Old No. 46/2 new No.86, 2nd Floor, Aaditanar Salai , Pudupet, Chennai | 625/- |
| 3 | | Sri Venkateswaraa Enterprises, No.15A, 1st Floor, Wellingdon Estate, 53, Ethiraj Salai, Chennai. | 700/- |

எனவே Dead Body Cover அத்தியாவசிய அவரமாக தேவையாக உள்ளதால் சுகாதார பணியின் அவரம் கருதி தமிழ்நாடு அரசு நிதி(ஊதியம்) துறை செயலாளர் அவர்களின் கடிதம் எண். 74/JS(MA)/Finance(Salairies)/2020 Dated 1.4.2020 ன்படியும், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Vive Solution, 13/14, Ambedkar Nagar Scheme Area, நிறுவனம் மூலம் வாங்கிக் கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 26,250/– ( ரூபாய் இருபத்து ஆறாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும் ) ஆகும்.

அலுவலக குறிப்பு.

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அரசால் கொரோனா வைரஸ் தடுப்பு நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **864, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொரோனா குறித்த அறிவிப்பு பலகைகள் நகரின் 10 இடங்களில் தயார் செய்து பொருத்திட விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. திரு. ஆர். தண்டபாணி,
   நகராட்சி ஒப்பந்ததாரர் — ரூ. 24500/–
2. எஸ்.எஸ்.பிளக்ஸ். அன் ஸ்டுடியோ — ரூ. 27500/–
   பழனி

எனவே, கொரோன வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையினை பொருட்டு அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு ஆர். தண்டபாணி, நகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **865, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் அனுமதியற்ற /அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள், ஆக்கிரமிப்புகள் தொடர்பான கீழ்க்கண்ட வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வழக்குகளை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களால் நகராட்சி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்வழக்குகளுக்கு வழக்கு கட்டணமாக ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.7500/–வீதம் தொகை ரூ.22,500/– வழஙகோரி 29.07.2020ம் தேதி பட்டியல் சமர்ப்பித்துள்ளார். இவ்வழக்குகளுக்கான கட்டணத்தை நகராட்சி நிலை வழக்கறிஞருக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வழக்கு எண். | பெயர் |
|---|---|---|
| 1 | WP(MD)No.7611 of 2020 | ஜே.சுதாகர் |
| 2 | WP(MD)No.7596 of 2020 | ஜி.ரமேஷ் |
| 3 | WP(MD)No.7598 of 2020 | எழில்வதனி |

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (ந.க.எண்.420/2004/எப்1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **866, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.744, நாள்.31.01.2020ன்படி, கொடைக்கானல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலம் தனியார் மயம் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதற்கு இவ்வலுவலக ந.க.எண்.3140/2016/எச்1, நாள்.31.01.2020ன்படி 80 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களைக் கொண்டு GESM Environment Services, Chennai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பந்தக் காலம் 31.07.2020 உடன் முடிவடைவதால் பொது மக்களின் நலன் கருதி நகர் பகுதிகளில் துப்புரவுப் பணி சுணக்கமின்றி நடைபெறும் பொருட்டும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகமெங்கும் பரவி உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத கால சூழ்நிலையினை கருத்தில் கொண்டு மேலும் 3 மாதங்களுக்கு ஒப்பந்தத்தினை பழைய விலை விகிதத்திலேயே கால நீட்டிப்பு செய்யலாம்.

தற்போது நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி ஒப்பந்தத்தினை வரும் 01.08.2020 முதல் 31.10.2020 வரை மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி GESM Environment Services, Chennai நிறுவனத்தின் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்வதற்கு உரிய நீட்டிப்பு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியதன் பொருட்டு பொது மக்களின் நலன் கருதி GESM Environment Services, Chennai நிறுவனத்தார் மூலம் ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3140/2016/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **867, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணைக் கடிதம் ந.க.எண்.28369/J3/2018, நாள்.22.11.2018ல் இந்நகராட்சிக்கு கூடுதலாக 16 துப்புரவுப் பணியாளர்களை தனியார் மயம் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.751, நாள்.28.02.2020ன்படி, 16 எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு M/s.Relyon Facility Services Pvt. Ltd., Chennai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.07.2020 உடன் முடிவடைவதால் பொது மக்களின் நலன் கருதி நகர் பகுதிகளில் துப்புரவுப் பணி சுணக்கமின்றி நடைபெறும் பொருட்டும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகமெங்கும் பரவி உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத கால சூழ்நிலையினை கருத்தில் கொண்டு மேலும் 3 மாதங்களுக்கு ஒப்பந்தத்தினை பழைய விலை விகித்திலேயே கால நீட்டிப்பு செய்யலாம்.

தற்போது நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவசியம் கருதி ஒப்பந்தத்தினை வரும் 01.08.2020 முதல் 31.10.2020 வரை மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி M/s.Relyon Facility Services Pvt. Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்வதற்கும் உரிய நீட்டிப்பு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியதன் பொருட்டு பொது மக்களின் நலன் கருதி M/s.Relyon Facility Services Pvt. Ltd., Chennai நிறுவனத்தார் மூலம் ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3140/2016/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **868, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள 20 தூய்மை பணியாளர்களை தற்காலிகமாக வேண்டி தனி அலுவலரின் 20.07.2020ம் தேதிய முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | தினக்கூலி அடிப்படையில் ஒரு நபருக்கு ஒரு நாள் கூலியாக ரூபாய். |
|---|---|---|
| 1. | திரு.L.ஜான் எபிநேசர், நகராட்சி ஒப்பந்ததாரர், கொடைக்கானல். | ரூ.250/– |
| 2. | திரு.P.சுரேஷ் குமார், சமாதான நகர், புதுவிளாங்குடி, மதுரை–18. | ரூ.375/– |
| 3. | திரு.N.மனோகரன், 12 / 1E5, லாஸ்காட் ரோடு, கொடைக்கானல். | ரூ.405/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.L.ஜான் எபிநேசர், நகராட்சி ஒப்பந்ததாரர், கொடைக்கானல் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **869, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும் கடந்த மார்ச் மாதம் முதல் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மிக தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்று நகர் பகுதிகளில் பரவுவதால் தற்சமயம் பணிபுரிந்து வரும் நிரந்தர மற்றும் தனியார் மயம் ஒப்பந்த பணியாளர்களை கொண்டு கிருமி நாசினி தெளிக்கும் பணி, துப்புரவுப் பணி, மழைநீர் கால்வாய் சுத்தப்படுத்தும் பணியினை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, நகர் பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவுவதை கட்டுப்படுத்த வேண்டி கிருமிநாசினி தெளிக்கும் பணி மற்றும் துப்புரவுப் பணிகள் சுணக்கமின்றி நடைபெற பொது சுகாதாரம் நலன் கருதி தற்காலிகமாக 60 நாட்களுக்கு 20 தூய்மை பணியாளர்களை நியமித்துக் கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–ஐ (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **870, நாள். 31.07.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.